செ.வெ.எண்: 556 நாள்: 26.08.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (26.08.2019) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசால் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் வாரந்தோறும் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் கலந்துகொள்ளும் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.

இன்றைய மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, வங்கி கடன், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி, முதியோர் உதவித்தொகை, திருநங்கைகளுக்கான வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வழியுறுத்தி 465 மனுக்கள் வரப்பெற்றன. வரப்பெற்ற மனுக்களை தொடர்புடைய அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சிறப்பாக பணிபுரிந்த சத்துணவு அமைப்பாளர், சமையளர் மற்றும் சமையல் உதவியாளர் உள்ளிட்ட 3 பணியாளர்களுக்கு ரூ.5,000 மதிப்பிலான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ்கள்

வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பாலமுரளி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) (பொ) இமாம் ஜாபர்உசேன் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**